**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KRISHNAGIRI**

**OS No. 387/2021**

**PW.2** is solemnly affirmed on **23.12.2022** in accordance with the provisions of the Act of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | கோவிந்தராஜ் | Father / Husband Name | |
| Village | | Taluk | |
| Caste | | Calling | |
| Religion | | Age | |

**முதல் விசாரணை :**

நான் வழக்கில் 3ஆம் தரப்பினர் ஆவேன். வாதி குமாருக்கு ஆதரவாக நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். வாதி குமாரையும், எதிர்வாதிகள் பிரபுவையும், ரகுவையும் எனக்கு தெரியும். வாதி குமார் 15.05.2020 அன்று ரூ.8,50,000/- மலையாண்டஹள்ளியில் வைத்து எதிர்வாதிகள் பிரபு, ரகுவிடம் கொடுத்தார். அன்றே காவேரிப்பட்டிணம் பத்திர பதிவு அலுவலகத்தில் உள்ள பத்திர எழுத்தர் கீதா என்பவரிடம் சொல்லி கடனுறுதி சீட்டு எழுதி வாதிக்கு கொடுத்தார்கள். மேற்படி கடனுறுதி சீட்டில் நான் முதலாவது சாட்சியாக கையெழுத்து செய்தேன். இரண்டாவது சாட்சியாக ஏசுராஜா கையெழுத்து செய்தார். பிரபுவும், ரகுவும் என் முன்பாகத்தான் கடனுறுதி சீட்டில் கையெழுத்து போட்டார். அதன்பிறகுதான் நானும், ஏசுராஜாவும் கையெழுத்து போட்டோம். அதன்பிறகு பத்திர எழுத்தர் கீதா கையெழுத்து செய்தார். காண்பிக்கப்படும் Ex.A1 முத்திரை வில்லை மற்றும் அதற்கு கீழ் உள்ள கையெழுத்துக்கள் பிரபு மற்றும் ரகுவின்

கையெழுத்துகளாகும். முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடைய சாட்சி கையெழுத்தாகும். ரூ.100/- க்கு மாதம் ஒன்றுக்கு ரூ.2/- வீதம் வட்டி கொடுப்பதாக எதிர்வாதிகள் ஒப்புக் கொண்டு கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்தார்கள். வாதி பால் டிப்போ வைத்து தொழில் செய்கிறார். வெளியூருக்கு பால் விற்பனை செய்து வருகிறார். குடும்ப செலவுக்கு என சொல்லித்தான் பிரபுவும், ரகுவும் குமாரிடம் பணம் வாங்கினார்கள். எதிர்வாதிகளிடம் ரொக்கமாக ரூ.8,50,000/- ஐ கொடுத்தார். குமார் பிரபு மற்றும் ரகுவிடம் பணம் கொடுத்ததை நானும், ஏசுராஜாவும் உடனிருந்து பார்த்தோம். இந்தபடிக்கு நான் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சி சொல்கிறேன். எனது அடையாளத்தை காண்பிக்கும் ஆதார் அட்டையின் புகைப்பட நகல் Ex.A4 ஆகும்.

R SAKTHIVEL

PRINCIPAL DISTRICT JUDGE
Digitally signed by R SAKTHIVEL
Location: KRISHNAGIRI